Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12
விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 219

திங்கட்கிழமை 03 ஜூலை 2023

ஆனி 18 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# போர் நடந்த இடங்களில் புதைகுழிகள் இருக்கும்!

## முல்லைத்தீவு மனிதப்புதைகுழி விடயத்தில் நீதியமைச்சர் திமிர்த்தனம்

**யாழ்ப்பாணம், ஜூலை 3**

**முல்லைத்தீவில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான அகழ்வு நடவடிக்கை சர்வதேச மேற்பார்வையில் நடைபெறவேண்டும் என்ற தமிழ்த் தரப்பின் கோரிக்கைகள் தொடர்பில் நேரடியாகப் பதிலளிப்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ஆகியோர் தவிர்த்துள்ளனர். அத்துடன் 'போர் இடம்பெற்ற பகுதிகளில் புதைகுழிகள் இருக்கத்தான் செய்யும்' - என்று நீதியமைச்சர் அலட்சியமாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.** »11

கிளிநொச்சியில்

# ஒரே வாரத்தில் 4 சிசுக்கள் சாவு!

## மருத்துவத் தவறே காரணம் பாதிக்கப்பட்டோர் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜூலை 3

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் நான்கு சிசு உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளதோடு, பிரசவத் தாய் ஒருவரின் கருப்பையும் அகற்றப்பட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. »12

# லிட்ரோ விலை நாளை திருத்தம்

கொழும்பு, ஜூலை 3

லிட்ரோ எரிவாயுவின் விலை நாளை செவ்வாய்க்கிழமை முதல் திருத்தப்படவுள்ளது. கடந்த மாத திருத்தம் போன்று இம்முறையும் எரிவாயுவின் விலை குறையும் என நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்தார். (அ-ஒ.இ)

# பிரபா கொலையுண்டாரா? எனக்கு எதுவுமே தெரியாது

## யாழ்ப்பாணத்தில் மைத்திரி நழுவல் பதில்



யாழ்ப்பாணம், ஜூலை 3

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உயிரிழப்புத் தொடர்பாக போரின் இறுதியில் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது எனக்கு எதுவும் அறிக்கையிடப்படவில்லை. எனக்கு மேலுள்ளவர்களுக்கே அது தொடர்பில் தெரிந்திருக்கும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன »11

# ஒற்றையாட்சிக்குள் தான் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு

## சுற்றிவளைத்து பதிலளித்த மைத்திரி

யாழ்ப்பாணம், ஜூலை 3

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வருமாக இருந்தால் ஒற்றையாட்சிக்குள்ளேயே மாகாண சபை முறைமையே தீர்வாக இருக்கும் என்று அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன »11

# போராடுவதற்கு இடம் வழங்கிய காணி உரிமையாளருக்கு மிரட்டல்

## போராட்டத்துக்கு இடையூறு ஏற்படுத்த பலாலி பொலிஸார் புது வியூகம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

தையிட்டியில் அமையப்பெற்றுள்ள சட்ட விரோத விகாரைக்கு எதிராகப் போராடுவதற்கு வழமையாக இடம் வழங்கும் காணி உரிமையாளர் பலாலி பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு கடுமையாக அச்சுறுத்தப்பட்டுள் »11

வடக்கு - கிழக்கில்

# விகாரைகளை இடித்தே கோயில்கள் அமைப்பாம்

## 'உருட்டுகிறார்' எல்லாவல மேதானந்த தேரர்



கொழும்பு, ஜூலை 3

வடக்கு - கிழக்கில் கட்டப்பட்டுள்ள கோயில்கள், புராதன விகாரைகளின் மேலேயே கட்டப்பட்டுள்ளன. அத்துடன் இங்கு மீட்கப்பட்ட கல்வெட்டுக்களின் ஊடாக சிங்களக் குடி »11

# பட்டப்பகலில் முதியவரிடம் வழிப்பறி

யாழ்., ஜூலை 3

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வழி கேட்பது போல் பாசாங்கு செய்து முதியவரொருவரிடமிருந்து பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் ஆயாக்கடவை சித்திவிநாயகர் அலயத்துக்கும், புன்னாலைக்கட்டுவன் சந்திக்கும் இடைப் »11



# தையிட்டி விகாரைக்கு எதிராக நான்காம் கட்டப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

தையிட்டியில் இராணுவத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நேற்று மீண்டும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை போயா தினம் என்பதால் விகாரையில் சிங்கள மக்கள் அழைத்து »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆயிரக்கணக்கான பக்தர்கள் சூழ தேரேறி வந்த நயினை அம்மன்!





யாழ்ப்பாணம், ஜூலை 3
வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழாவின் முத்தேர் இரதோற்சவம் நேற்று வெகுசிறப்பாக இடம்பெற்றது.
இன்று தீர்த்தோற்சவமும், நாளை தெப்போற்சவமும் இடம்பெற்று அன்று மாலை கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவடையவுள்ளது. (எ-27,66)



## கஞ்சாவுடன் இருவர் கைது

மன்னார், ஜூலை 3
அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளமடு, மருதமடுக்குளம் பகுதியில் 82 கிலோ 840 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன், இது தொடர்பில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் பயணித்த இரு மோட்டார்சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.
பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடந்துள்ளது. கைது செய்யப்பட்ட இருவரும் புதுக்குடியிருப்பு மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த 36 மற்றும்23வயதுடையவர்கள்என்றுபொலிஸார் தெரிவித்தனர். (எ-56,60)

# அரசாங்கத்தின் மோசடிக்கு நாடாளுமன்றம் அனுமதி!

சாடுகின்றார் உதய கம்மன்பில



**கொழும்பு, ஜூலை 3**
**அரசாங்கத்தின் பிறிதொரு மோசடிக்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டம் தொடர்பில் சட்டமா அதிபர் திறைசேரிக்கு முன்வைத்த பரிந்துரைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. கடன் மறுசீரமைப்பு தொடர்பான சகல அதிகாரங்களும் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளன.**

இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.
பிவிதுரு ஹெல உறுமய கட்சி அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
தேசிய கடன் மறுசீரமைப்புத் தீர்மானத்துக்குத் தாம் ஏன் வாக்களித்தோம் என்பதை பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் அறியாமல் உள்ளார்கள். நாடாளுமன்ற பதவியைத் தக்கவைத்துக்கொள்வதற்காக ஜனாதிபதியின் கட்டளைகளுக்கு அமைய செயற்படுகிறார்கள்.
தேசிய கடன் மறுசீரமைப்புக்கான தீர்மானங்கள் எடுக்கும் சகல அதிகாரங்களும் ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.
தேசிய கடன் எந்தவகையில் மறுசீரமைக்கப்படும் என்பது தொடர்பான திட்டம் அமைச்சரவைக் கொள்கைப் பத்திரத்தில் தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும் என சட்டமா அதிபர் கடந்த மாதம் 27ஆம் திகதி திறைசேரியின் செயலாளரிடம் உத்தியோகபூர்வமாக வலியுறுத்தியுள்ளார்.
கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.
ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பாதுகாப்பு தொடர்பில் எந்தவித சட்ட உத்தரவாதமும் வழங்கப்படவில்லை. எதிர்வரும் காலங்களில் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் இந்தப் பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிடும்- என்றார். (எ-இ)

## 2 கோடி ரூபா பெறுமதியான பீடி இலை மீட்பு: ஒருவர் கைது

மன்னார், ஜூலை 3
வண்ணாத்தவில்லு - கரைத்தீவு பகுதியில் மீன்பிடிப் படகு ஒன்றின் மூலம் கடத்திச் செல்லப்பட்ட சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் நேற்றுக் காலை கைப்பற்றப்பட்டன என்றும், இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.
ஆயிரத்து 947 கிலோ பீடி இலைகள் கொண்ட 65 பொதிகளுடன் வண்ணாத்தவில்லு - கரைத்தீவு பகுதியில் வசிக்கும் 50 வயதுடைய நபரே சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், பீடி இலைகளைக் கடத்தப் பயன்படுத்தப்பட்ட மீன்பிடிப் படகொன்றையும் கடற்படையினர் கைப்பற்றினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# பல இலட்சம் பக்தர்கள் சூழ மடுத் திருத்தலத் திருவிழா!



மன்னார், ஜூலை 3
மன்னார், மடு திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கும் நிகழ்வு நேற்றுக் காலை 6.15 மணியளவில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் நடைபெற்றது.
கடந்த ஜூன் மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்தைத் தொடர்ந்து, நவநாள் ஆராதனைத் திருப்பலிகள் இடம்பெற்று, கடந்த சனிக்கிழமை மாலை வேஸ்பர்ஸ் ஆராதனை நடைபெற்றது.
திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதை தொடர்ந்து, மடு அன்னையின் ஆசீர் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.
திருவிழா திருப்பலியில் அருட்தந்தையர்கள், அருட் சகோதரர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளடங்கலாக சுமார் 5 இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் கலந்துகொண்டனர்.
1924ஆம் ஆண்டு மருதமடு திருத்தலத்தில் பல ஆயர்கள் சூழ மடு அன்னைக்கு முடிசூட்டு விழா இடம்பெற்றது. இந்த முடிசூட்டு விழாவின் நூற்றாண்டு நிறைவு யூபிலி பெருவிழாவாக எதிர்வரும் 2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொண்டாடப்படவுள்ளது.
அதை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை திருவிழாவின்போது மன்னார் மறை மாவட்ட ஆயர், யூபிலி நூற்றாண்டு விழாவை பிரகடனம் செய்து வைத்தார்.
தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனி இடம்பெற்றது. பின்னர், விசேடமாக யூபிலி ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டு, அதை வெளிப்படுத்தும் முகமாக வருடம் முழுவதும் பறக்க விடப்படுகின்ற யூபிலி கொடி மருதமடு திருத்தல முன் மண்டபத்தில் ஏற்றப்பட்டது. (எ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனவரி மாதத்தில் மேலும் மின்கட்டணம் குறையும்!

*மின்சக்தி அமைச்சர் தெரிவிப்பு*

**கொழும்பு, ஜூன் 3**

**அரசாங்கம் தற்போது மேற்கொண்டுள்ள மின்சார கட்டணக் குறைப்பைவிடவும் அதிகமான கட்டணக் குறைப்பை எதிர்வரும் ஜனவரியில் மேற்கொள்ள எதிர் பார்க்கப்படுகின்றது என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெப்ரவரி மாதத்தில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கும் போது வருடாந்தம் இரு தடவைகள் அந்த விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என பகிரங்கமாக அறிவித்திருந்தோம். ஜூலை மாதத்தில் கட்டணத் திருத்தம் மேற்கொள்வோம் எனத் தெரிவித்திருந்தோம். அதற்கிணங்கவே நாம் தற்போது மின் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். எதிர்க்கட்சியில் பலருக்கு தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இதுவரை தெளிவில்லாமல் உள்ளது.

நெருக்கடியான காலகட்டத்தில் அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானங்களின் பிரதிபலன்களை மக்கள் தற்போது பெற்றுக்கொள்ளமுடிகிறது. தேசிய கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படாவிட்டால் இன்னும் சில வருடங்களில் நாடு பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள நேரும். எதிர்க்கட்சியினர் அதை நிவர்த்தி செய்ய முன்வருவார்களா? அரசாங்கம் ஒருபோதும் வருமானத்தை அடிப்படையாக வைத்து செலவினங்கள் பற்றி சிந்திக்கவில்லை. எரிபொருள் போன்றவற்றில் மக்களுக்கு முடிந்தளவு நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளாமல் நாம் சர்வதேச கடன் வழங்குநர்களிடம் கடன் மறுசீரமைப்பை எவ்வாறு எதிர்பார்க்கமுடியும். எமக்கு கடன் ஒத்துழைப்பை வழங்குவோர், இனியும் வழங்கவுள்ளவர்கள். அவ்வாறு நாம் செயற்பட்டால் அதை ஏற்றுக்கொள்வார்களா என்று சிந்திக்க வேண்டும் - என்றார்.

(எ-இ)

# சபாநாயகரின் நடத்தையில் அதிருப்தி

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் நடத்தைக் கோலம் தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ளோம் என்று பிரதான எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. சபாநாயகரின் செயற்பாட்டால் ஜனநாயகம் தோற்கடிக்கப்பட்டுள்ளது என்றும், அவரின் நடத்தை தொடர்பில் ஏனைய பங்காளிக் கட்சிகளுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான விவாதம் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய முன்னெடுக்கப்படவில்லை என்றும் சபாநாயகர் அவரின் கடமைகளை மீறி பக்கச்சார்பாகச் செயற்படுகின்றார் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

மிகவும் தவறான முறையிலும், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீறியே செயற்பட்டுள்ளார்கள். தெளிவாக சபாநாயகர் பக்கச்சார்பாகவே செயற்படுகிறார். ஆளும் தரப்பினரின் ஆலோசனைக்கமைய விவாதத்தைக் குறுகிய காலத்தில் நிறைவுசெய்யவும் நடவடிக்கை எடுத்திருந்தார். ஞாயிற்றுக்கிழமை விவாதத்தை நடத்தாததால், அதே காலப்பகுதியை எடுத்து சனிக்கிழமை முழுமையான விவாதத்தை நடத்தவே கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. ஆனால், சபாநாயகர் அந்தத் தீர்மானங்களை முழுமையாக மீறி சர்வாதிகாரப் போக்கில் செயற்பட்டமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும். சபாநாயகருக்குரிய கடமையை முழுமையாக மீறி தமக்கு ஏற்றவாறு தனிப்பட்ட நோக்கங்களுக்காகச் செயற்படுவது கவலைக்குரிய விடயமாகும். சபாநாயகரின் நடத்தைக் கோலம் தொடர்பாக ஏனைய எதிர்த்தரப்பிலுள்ள பங்காளிக்கட்சிகளுடன் கலந்தாலோசித்துவிட்டு நிச்சயமாக தீர்மானமொன்றை எடுப்போம்-என்றார்.

(எ-இ)

# பறிக்கப்படும் வாகனங்கள் இனிமேல் முப்படைகளுக்கு

கொழும்பு, ஜூலை 3

சுங்கத்தால் கைப்பற்றப்படும் மற்றும் சட்ட விரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட (அசெம்பிள்) வாகனங்களை சுங்கத்தினரிடம் ஒப்படைப்பதற்குப் பதிலாக, அவற்றை பறிமுதல் செய்து பொலிஸ் மற்றும் பாதுகாப்பு பிரிவுச் சேவைக்கு வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதற்காக புதிய சட்ட வரைவு தயாரிக்கப்பட்டு வருகின்றது என்றும், அதற்கு ஏற்ற வகையில் பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்ட வாகனங்கள் கைப்பற்றப்பட்ட பின்னர், அவை அரச பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டு, அது சட்டவிரோத வாகனம் என்று நிரூபிக்கப்பட்டால், சுங்கத்தின் பொறுப்பில் வைக்கப்படும்.

இனிமேல் இந்த நடைமுறையின்றி, பறிமுதல் செய்யப்படும் வாகனங்களை பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினரின் பயன்பாட்டுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

(எ-இ)

# தேயிலை விலையில் சரிவு



கொழும்பு, ஜூலை 3

எதிர்பாராதவிதமாக தேயிலை விலை குறைந்துள்ளது என்று தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் லயனல் ஹேரத் தெரிவித்துள்ளார்.

ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு, தேயிலை வரத்து அதிகரிப்பு மற்றும் பொருள்களின் விலை அதிகரிப்பு என்பன பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். ஒரு கிலோ தேயிலையின் சராசரி விலை ஆயிரத்து 500 ரூபாவாக இருந்தாலும் அது சுமார் ஆயிரம் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (எ-இ)




**யா**னை தன்ர தலையில தானே மண்ணள்ளிப் போடுறதெண்டு கேள்விப்பட்டிருப்பியள். காட்டுக்க இருக்கிற பெரிய கிடங்குகளுக்க யானை விழுந்திட்டால், அதில இருந்து வெளியில வர நினைச்சு, அங்க இருக்கிற மண்ணெல்லாம் தும்பிக்கையால உறிஞ்சி மேலே போடுமாம். ஆனால் கிடங்கு பெரிசா இருந்தால் அந்த மண் வெளியில போகாமல் அந்த யானையின்ர தலையிலயே விழுந்து அதை மூடிப்போடுமாம். அதுக்குத்தான் இப்பிடிச் சொல்லுறவை. நாலைஞ்சு நாளுக்கு முந்தி, யாழ்ப்பாணத்தில இருந்து கொழும்புக்குப் போன ஒரு பஸ்ஸைப் பற்றி காதில விழுந்த் கதையளைக் கேக்க, இப்பத்தை யானையள் தங்களுக்கு லாபம் வருமெண்டால், தலைக்கு மண்ணைப் போடாமல், மண்ணெண்ணெயைக் கூட ஊத்தி எரியும் எண்டுதான் மனசுக்குப்பட்டிச்சு.

அந்த பஸ் புத்தளத்தில சாப்பாட்டுக்கு நிண்டிட்டு, வெளிக்கிட்டுப் போன கொஞ்ச நேரத்தில எரிஞ்சிருக்கு அதுவும் ஓடிக்கொண்டிருக்கைக்கதான் நெருப்பைக் கண்டிட்டு எல்லாரும் ஆத்துப்பதைச்சுக் கொண்டு இறங்கி ஓடினவை. ஆனால் எல்லாரும் வெளியில போறதுக்கும், தங்கட 'பாக்' எல்லாத்தையும் எடுக்கிறதுக்கும் அவைக்கு அவகாசமும் இருந்தது. அப்பிடி இருந்தும் பஸ்ஸில மூண்ட நெருப்பை ஒருத்தராலையும் நூர்க்க முடியேலை. அந்த பஸ் எரிஞ்சு கடைசியா எலும்புக்கூடாத்தான் மீட்க முடிஞ்சுது. பாவம், அந்த பஸ்காரர். இப்பிடி ஓடிக் கொண்டிருந்த பஸ் எரிஞ்சால், கோடிக் கணக்கில இன்சூரன்ஸ் தானே அவருக்கு மிச்சம்.

பஸ் எரிஞ்சதைவிட இன்னொரு கவலையும் அந்த 'ஓனருக்கு' இருக்கும். பஸ் எரியிறதுக்கு மூண்டு நாளைக்கு முதல்தான் யாழ்ப்பாணம் இலுப்பையடியில உள்ள கராஜில விட்டு திருத்தவேலை எல்லாம் செய்தவர். அந்தக் கராஜ்காரர் சாத்திரம் தெரிஞ்சவர் போல. அவருக்கு அப்பிடி பஸ் எரியப்போகுதெண்டு ஏதும் அசுமாத்தம் தெரிஞ்சிருக்குப் போல. அதால அதில இருந்த நல்ல பார்ட்ஸ் எல்லாத்தையும் ஒண்டும் விடாமல் கழட்டிப் போட்டு, அதுக்குப் பதிலா பழைய பார்ட்செல்லாம் போட்டுத்தான் ஒப்பேற்றினவர். அதோட இஞ்சினும் கெதியா சூடாகிற மாதிரி ஏதோ விளையாட்டெல்லாம் காட்டியிருக்கினம். இப்பிடியெல்லாம் காசைக் கரியாக்கி, மூண்டு நாளுக்கு முதல் திருத்தின பஸ், இப்பிடி திடீரெண்டு தீப்பிடிச்சால் ஓனருக்கு எப்பிடி இருக்கும்? பஸ்ஸுக்கு ஃபுல் இன்சூரன்ஸ் இருக்குதாம். ரண்டரைக் கோடி ரூபாவுக்கு நாலைஞ்சு வருசத்துக்கு முதல் வாங்கின பஸ் எரிஞ்ச கவலையையும், இழப்பையும் வெறும் மூண்டு கோடி இன்சூரன்ஸைக் குடுத்து இல்லாமல் செய்ய ஏலுமோ? கழட்டி வைச்ச பார்ட்ஸை வித்தாலும் ஐம்பது லட்சம்தான் தேறும்போல. சட்டத்தில இருக்கிற 'துவாரத்தால' வெட்டி ஓடித் திரியிற அந்த பஸ் ஓனர் என்ன செய்யப் போறார் எண்டது அந்த 'ஈஸ்வரனுக்குத்தான்' வெளிச்சம்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் - இலங்கை விரைவில் விமான சேவை

இஸ்ரேல் மற்றும் இலங்கை இடையே நேரடி விமான சேவையை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

டெல் அவிவில் இருந்து கட்டுநாயக்கவுக்கு நேரடி பயணிகள் விமான சேவையை முன்னெடுப்பது தொடர்பில் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் இரு நாட்டு சிவில் விமான சேவை நிறுவனங்களுக்கும் இடையில் அண்மையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இது தொடர்பாக இரு நாடுகளின் சிவில் விமானப் போக்குவரத்துத் துறைகளுக்கு இடையிலும் விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

(எ-இ)


## வீட்டுப்பணிப்பெண் தேவை

திருநெல்வேலியில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு குழந்தைகளை பராமரிக்க பணிப்பெண் ஒருவர் தேவை. தங்கிநின்று வேலைசெய்யபவர் விரும்பத்தக்கது.

தொடர்பு:-077 369 6714, 077 049 2210


## மரண அறிவித்தல்

தோற்றம் 11 - 05 - 1940



மறைவு 01 - 07 - 2023

### செல்லத்துரை சின்னத்தங்கம்

கைதடி மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சின்னத்தங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (01.07.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (05.07.2023) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

071 366 7044

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

மலர்வு 21 • 11 • 1938



உதிர்வு 01 • 07 • 2023

### கந்தசாமி சாந்தம்மா

கோப்பாயை பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கைப் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சாந்தம்மா நேற்றுமுன்தினம் (01.07.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் அன்னம்மா தம்பதியரின் மருமகளும், திரு. கந்தசாமி (வீரகேசரி நிறுவனத்தின் ஓய்வுபெற்ற முன்னாள் பொது முகாமையாளர் (GM)) அவர்களின் அன்பு மனைவியும், ஸ்ரீஸ்கந்தராசா கலாநிதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற தியாகராசா மற்றும் சிவநாதன், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திராணி, நிதிமலர், கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நுணாவில் மேற்கு காந்தாளம் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 737 2357 தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 12 . 1951



இறப்பு 01 . 07 . 2023

### திரு.நாகேசு தங்கராசா (பேபி)

(கல்வியங்காடு பிரபல வியாபாரி)

யாழ். புதியசெம்மணி வீதி, கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நாகேசு தங்கராசா (பேபி) அவர்கள் கடந்த (01.07.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேசு பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சறோஜாவின் பாசமிகு கணவரும், கோகுலன், இராகுலன் (ஜேர்மனி), ஷாமிலன், டக்ஷிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, தவராசா, தில்லைவாசகர் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, இரத்தினாவதி, சத்தியகுமார் மற்றும் ஜெயக்குமார், லோகேஸ்வரன், தண்மதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.07.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 223 1175

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 07 . 1952



இறப்பு 01 . 07 . 2023

### தம்பு தனலட்சுமி

தாவடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தனலட்சுமி அவர்கள் கடந்த (01.07.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், ருக்குமணி, கயிலாயநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நடேசு தையலம்பாள் தம்பதியரின் பாசமிகு மருமகளும், தம்புவின் அன்பு மனைவியும், குகதாஸ் (டோகா), அமரர் சதீஸ், றஞ்சித், நிரோஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜிதா, மேனகா, பிரசாத் ஆகியோரின் மாமியாரும், கனுஜா, அபிசயன், மஜித், கேனுஜா, இந்துஜன், சேனுசாத், பிரதிஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றஞ்சிதமலர், பத்மராணி, ஜெயக்குமாரி, அமரர் சிவகுமாரி, செல்வராணி, சண்முகராசா, சாந்தமணி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.07.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளிகோவிலடி, தாவடி வடக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியாவின் அவமானம்

இன்னொருமுறை உலக அரங்கில் இலங்கைக்கு செருப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. 22 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு அன்பளிப்பாகக் கொடுத்த, நீண்ட தந்தங்களைக் கொண்ட முத்துராஜா என்னும் யானையை மீளப்பெற்றதன் மூலம் அந்தச் செருப்படியைக் கொடுத்திருக்கிறது தாய்லாந்து. சுமார் 7 இலட்சம் டொலர் செலவில் தனி விமானத்தில் நேற்றுப் பறந்தது முத்துராஜா மட்டுமல்ல, இலங்கையின் மானமும் தான்.

2001 ஆம் ஆண்டு சந்திரிகா, ஜனாதிபதியாக இருந்தபோது 'சக் சுரின்' என்னும் யானையை நல்லெண்ணத்தின் பரிசாக தாய்லாந்து வழங்கியது. கண்டி எசெலப் பெரஹராவில் புத்தரின் புனித தந்ததாதுவை தங்கள் நாட்டு யானை சுமப்பது தமக்குப் பெருமை என எண்ணியே அந்த யான்னையை தாய்லாந்து பரிசளித்திருந்தது. ஆனால், சந்திரிகா அந்த யானையை தலதா மாளிகைக்கு வழங்காமல் அளுத்கம கந்தே விகாரைக்கே கொடுத்தார். இது தாய்லாந்துக்கு முதல் ஏமாற்றம். வேறு விகாரைகளில் உள்ள யானைகள்கூட பெரஹராவுக்கு கொண்டு செல்லப்படுகையில், முத்துராஜா எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்ட 'சக் சுரின்' ஒருபோதும் புனித தந்ததாதுவைச் சுமக்கவேயில்லை. இது தாய்லாந்துக்கு இரண்டாவது ஏமாற்றம். கந்தே விகாரையில் முத்துராஜாவைப் பார்வையிட்ட சில சுற்றுலாப் பயணிகள், அந்த யானை போதிய உணவின்றி மெலிந்த தோற்றத்தோடும், கால்களில் சித்திரவதையால் உண்டான காயங்களோடும் போராடிக் கொண்டிருந்ததைக் கண்டனர், விலங்கு நல அமைப்புகளிடம் முறையிட்டனர். இப்படி தங்களின் பரிசொன்றை இலங்கை மிகக்கேவலமாக நடத்தியதைக் கண்ட தாய்லாந்து, அதன் பின்னரே முத்துராஜாவை தாயகத்துக்கு மீள் அழைக்கும் முடிவை இலங்கையிடம் மிகக் கடுமையாக முன்வைத்தது.

புனித தந்ததாதுவைச் சுமக்கவென அனுப்பப்பட்ட முத்துராஜாவை, விகாரைக்கான விறகை ஏற்றிவரவும், பிற நிறுவனக் களியாட்டங்களில் வேடிக்கை காட்டவுமே கந்தே விகாரை பயன்படுத்தி இருந்தது. போதிய உணவும் அதற்குக் கொடுப்பதில்லை. கால்களில் ஆணி அடித்தும் கொடுமைப் படுத்தியிருக்கின்றனர். இந்தக் குற்றச்சாட்டுகளை முன்வைத்த தாய்லாந்திடம், 'இனிமேல் கவனமாகப் பார்க்கிறோம்' என இலங்கை கெஞ்சிய போதும், அதற்கு தாய்லாந்து காதுகொடுக்கவில்லை. கந்தே விகாரையில் இருந்து தெஹிவளை விலங்குக் காட்சிச்சாலைக்கு முத்துராஜா கொண்டு செல்லப்பட்டு, சிகிச்சை வழங்கப்பட்டு, இப்போது தனி விமானத்தில் தாய்லாந்துக்கு கொண்டுசெல்லப்பட்டும் விட்டது. ஒரு யானையைக் கூட பராமரிக்க வக்கற்றதாக சர்வதேசத்தின் முன் தலைகுனிந்துள்ள இதே இலங்கையின் பௌத்த பேரினவாதம் தான், ஆயிரம் விகாரைகளை தமிழர் பகுதிகளில் பல பில்லியன் ரூபா செலவிட்டு அமைத்து வருகின்றது. எவ்வளவு பெரிய கேவலம் இது? எந்தப் பௌத்தமதத்துக்காகப் பாடுபடுகிறோம் என்று பேரினவாதிகள் சொன்னார்களோ, அதே பௌத்தத்தின் சின்னமாக வழங்கப்பட்ட யானையை அவர்களால் பராமரிக்கமுடியவில்லையே. ஒரு நாடு பரிசாக வழங்கிய பொருளொன்றை மீளப்பெறுவது போன்ற அவமானம் வேறொன்றும் கிடையாது. அந்த அவமானத்தை இலங்கை வெகுசுலபமாகவே சம்பாதித்துவிட்டது. ஆசியாவின் அதிசயமாக இருந்த இலங்கை, இப்போது ஆசியாவின் அவமானமாக மாறிவிட்டது.

கிட்டத்தட்ட முத்துராஜாவைப் போலவே, தமிழ்மக்களையும் பேரினவாதம் நடத்தியது. பட்டினி போட்டது. விலங்கிட்டு அடைத்தது. மிகக் கொடுமையான சித்திரவதைகளைப் பிரயோகித்தது. சுதந்திரக் கனவைச் சிதைத்தது. மகோன்னதக் கனவுகளோடு இருந்த இனத்தை அடிமைகளாக்கி மகிழ்ந்தது. பின்னர் சர்வதேசத்திடம் தமிழரின் சிதைவுகளைக் காட்டி, பிச்சையெடுத்தது. முத்துராஜா மீது அதன் தாய்நாடான தாய்லாந்துக்கு உண்மையான அக்கறை இருந்தது. முத்துராஜாவுக்கு இழைக்கப்படும் கொடுமையை, அவமதிப்பை தன் நாட்டின் மீதான அவமானமாகக் கருதி, பதிலடியாகத் தன் யானையை அது 22 வருடக் கொடுமையில் இருந்து மீட்டெடுத்துவிட்டது. ஆனால், பாழ்பட்ட தமிழினத்தை யார் மீட்பார்?

## நாளொரு நல்வார்த்தை

"ஒரு வார்த்தை நம்மை வாழ்வின் அனைத்து சுமைகளிலிருந்தும் வலிகளிலிருந்தும் விடுவிக்கிறது. அந்த வார்த்தைதான் அன்பு"

— சோஃபோக்கிளிஸ்




# தேசியக் கடன் மறுசீரமைப்பில் வெளிப்படைத்தன்மை தேவை!

## கலாநிதி எம். கணேசமூர்த்தி தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 3**

**தேசியக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். இல்லையேல் கடன் மறுசீரமைப்பு மக்களிடையே வீண் குழப்பத்தைத் தோற்றுவித்து, அது நாட்டின் நிதி ஸ்திரத்தன்மையற்ற நிலைமையை ஏற்படுத்தும்.**

- இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை விரிவுரையாளர் கலாநிதி எம். கணேசமூர்த்தி தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடன் மறுசீரமைப்பு நாட்டு மக்களிடையே தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது. தேசியக் கடன் மறுசீரமைப்பு நாட்டின் நிதி நிலைமை உறுதிப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நாட்டில் நிச்சயமற்ற தன்மை அல்லது பீதி நிலைமை ஏற்படுமாயின், அது நாட்டின் அபிவிருத்திக்கு சிறந்ததல்ல. கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாட்டு மக்களிடத்தில் ஏற்படும் பீதிநிலை இவ்வாறான சூழலை ஏற்படுத்தலாம். தேசியக் கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான விடயங்களைக் கட்டாயமாக அரசாங்கம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

நாணய நிதியம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனில் 17 பில்லியனைக் குறைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது. அதன் அடிப்படையில் இந்த 17 பில்லியன் ரூபாவை உள்நாட்டுக் கடனில் குறைப்பதா அல்லது வெளிநாட்டுக் கடனில் குறைப்பதா என்பது தொடர்பில் சிக்கல் தோன்றியுள்ளது.

கடந்த காலங்களில் அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட முட்டாள்தனமான தீர்மானங்கள், பெற்றுக்கொள்ளப்பட்ட எண்ணற்ற கடன்கள், ஊழல் மற்றும் மோசடி என இவை அனைத்தையும் தற்போது நாட்டு மக்கள் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நடுத்தர மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். ஏற்கனவே வறுமை அவர்களின் கழுத்தை நெரிக்கும் நிலையில் தற்போது கடன் மறுசீரமைப்பு காரணமாக நிதி ஸ்திரத்தன்மையற்ற நிலை தோன்றுமாயின், அவர்கள் பாதிக்கப்படுவார்கள் - என்றார். (எ-இ)



# பேக்கரி உற்பத்திகளின் விலையைக் குறையுங்கள்

## நுகர்வோர் உரிமையை பாதுகாக்கும் தேசிய இயக்கம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 3

மின் கட்டணக் குறைப்புக்கு ஏற்ப பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறைக்கப்பட வேண்டும் என நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

எரிவாயு விலைகள் குறைக்கப்படும்போது பேக்கரி உரிமையாளர்கள் மற்றும் உரிமையாளர் சங்கங்கள் தமது வெதுப்பகங்கள் மின்சாரத்தின் மூலம் இயங்குகின்றன என்று கூறுகின்றனர். அதனால் பேக்கரி உற்பத்திகளின் விலைகளைக் குறைக்க முடியாது என அந்தச் சந்தர்ப்பங்களில் தெரிவித்தனர்.

தற்போது அதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. மின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ள நிலையில் பேக்கரி உற்பத்திகள் மற்றும் சிற்றுண்டிச் சாலை உணவுகளின் விலைகள் குறைக்கப்பட வேண்டும் - என்றார். (எ-இ)

நாளை 04.07.2023 செவ்வாய்க்கிழமை ஆனி 19

சுபநேரம் : 10.27 - 11.57
ராகுகாலம் : 02.57 - 04.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டை நிறுத்திக் கொண்டது உலகின் பழமையான செய்தித்தாள்

**நியூயோர்க், ஜூலை 3**
**உலகிலேயே மிகப் பழமையான செய்தித்தாள் என்ற பெருமையைப் பெற்ற வீனர் செய்துங் (Wiener Zeitung) தனது வெளியீட்டை நிறுத்தியுள்ளது.**

ஆஸ்திரியாவின் வியன்னாவை தளமாகக் கொண்டு இயங்கிய இந்தச் செய்தித்தாள் கடந்த 30 ஆம் திகதி தனது இறுதிச் செய்தித்தாளை வெளியிட்டது.

கிட்டத்தட்ட 320 ஆண்டுகள் தொடர்ந்து நாளிதழை வெளியிட்டு வந்த, அரசுக்குச் சொந்தமான இந்தச் செய்தித்தாள் நிறுவனம், நிதி நெருக்கடி காரணமாக, வருவாய் இழப்பைச் சந்தித்ததால் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

வீனர் செய்துங்வெளியீட்டின் கடைசி நாளான கடந்த வெள்ளிக்கிழமை, தனது செய்தித்தாளின் முகப்புப் பக்கத்தில், 116, 840 நாள்கள், 3,839 மாதங்கள், 320 ஆண்டுகள், 12 அதிபர்கள், 2 குடியரசுகள், 1 நாளிதழ் என அச்சிட்டு, தனது செய்தித்தாளுக்கு தானே இறுதி அஞ்சலி செலுத்திக்கொண்டது.

செய்தித்தாளின் முடிவால் வியன்னாவைச் சேர்ந்த ஏராளமான மக்கள் தங்களது வருத்தத்தைப் பதிவு செய்து வருகிறார்கள். பலரும் இந்தச் செய்தித்தாளை வாங்கிப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளப்போகின்றோம் என்று உணர்ச்சிபொங்க பதிவிட்டுள்ளனர். (எ-இ)


WIENER ZEITUNG
116.840
TAGE
3.839
MONATE
320
JAHRE
12
PRÄSIDENTEN
10
KAISER
2
REPUBLIKEN
1
ZEITUNG

# பூச்சிகளால் நிலைகுலையும் நியூயோர்க்

கொழும்பு, ஜூலை 3
அமெரிக்காவின் நியூயோர்க் நகர குடியிருப்புவாசிகளை அளவில் மிகச்சிறிய பூச்சிகளின் கூட்டம் திண்டாட வைத்துள்ளது. சுமார் மூன்று நாள்களாக நியூயோர்க்கின் மன்ஹாட்டன் மற்றும் புரூக்ளின் பகுதிகளைச் சுற்றிப் பெருமளவில் தோன்றிய இந்த சிறிய பூச்சிகள் வீதியில் செல்பவர்களுக்கும், வாகனம் செலுத்துபவர்களுக்கும் இடையூறாக இருக்கின்றன.

நியூயோர்க் நகர சுரங்கப்பாதைகளிலும் இந்தப் பூச்சிகள் கூட்டம் ஊடுருவியுள்ளது. இதுதொடர்பாக சிட்னி பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் வல்லுநரான பேராசிரியர் டேவிட் லோமன், “இந்த பூச்சிகள், சிறகுகள் கொண்ட அஃபிட்ஸ் (aphids) வகை பூச்சிகளே, அவை க்னாட்ஸ் ((gnats -ஒருவகை கொசு) அல்ல” என்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்தத் திடீர் அஃபிட்ஸ் தாக்குதல் அபூர்வமானது என்றாலும், இது வானிலை மாற்றத்தின் விளைவு என்று புகழ்பெற்ற கார்னெல் பல்கலைக்கழகத்தின் மருத்துவர் கோரி மோரோ தெரிவித்துள்ளார். (எ-இ)



# அமைதியான நாடாக தொடர்ந்து ஐஸ்லாந்து

ரெய்காவிக், ஜூலை 3
தொடர்ந்து 15ஆவது தடவையாக உலகின் அமைதியான நாடாக ஐஸ்லாந்து தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

உலகளாவிய அமைதி குறியீட்டின்படி, இந்த ஆண்டும் ஐஸ்லாந்து உலகின் அமைதியான நாடாக இடம்பிடித்துள்ளது.

மேலும், சிங்கப்பூர், போர்த்துக்கல், ஸ்லோவேனியா, ஜப்பான் மற்றும் சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளும் முதல் 10 இடங்களில் இடம்பெற்றுள்ளன.

முன்னைய காலங்களில் தரவரிசையில் முன்னிலையில் இருந்த கனடா, செக்குடியரசு, பின்லாந்து, குரோஷியா ஆகிய நாடுகள் இந்த ஆண்டு பட்டியலில் குறைந்த இடத்தைப் பிடித்துள்ளன. அதேவேளை, ஆப்கானிஸ்தான் உலகின் மிகவும் ஆபத்தான நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்**: மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**இடபம்**: வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும் நாள். உறவினர்களாலும் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிடிவாதம் சற்று வருத்தம் தரும்.

**மிதுனம்** : எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். கடன் பிரச்சினைகள் சுமுகமாக முடியும். வியாபாரம் லாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**கடகம்**: உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும்.

**சிம்மம்**: முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம்.

**கன்னி**: தேவையான பணம் கிடைக்கும். இளைய சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்**: காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால்,குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**விருச்சிகம்** : சகோதர வகையில் எதிர்பார்த்து இழுபறியாக இருந்த காரியம் அனு கூலமாக முடியும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். சிறுசிறு விவாதங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு**: குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளை களின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்**: தன்னம்பிக்கையுடனும் தைரியத்துடனும் செயற்படுவீர்கள். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்**: நீங்கள் மேற்கொள்ளும் புதிய முயற்சி சாதகமாக முடிவதுடன், அதனால் எதிர்பார்த்த ஆதாயமும் கூடுதலாகக் கிடைக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**மீனம்**: காரியங்கள் அனுகூலமாக முடியும். அதிகப்படியான செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். உங்கள் தேவையை அறிந்து தந்தை பண உதவி செய்வது மகிழ்ச்சி தரும்.

# சிறுவன் கொலை: மக்கள் போராட்டம் களியாட்ட நிகழ்வில் பிரான்ஸ் அதிபர்

பாரிஸ், ஜூலை 3
பிரான்ஸில் சிறுவன் படுகொலைக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தி வரும் நிலையில், பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் இசை நிகழ்ச்சியொன்றில் பங்கேற்று தனது மனைவியுடன் நடனம் ஆடியுள்ளமைக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் 17 வயதுச் சிறுவன் ஒருவன் பொலிஸ் கட்டுப்பாட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதனையடுத்து அங்கு பொதுமக்களால் கடந்து மூன்று நாள்களாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

போராட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக 40 ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸார் பாதுகாப்புப் பணிகளில் களமிறக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் தனது மனைவி பிரிகிட் உடன் பாரிஸ் நகரில் இசைநிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு பாடலுக்கு நடனமாடியுள்ளார். அதற்கு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். (ச-இ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மீது தாக்குதல்

கொழும்பு, ஜூலை 3

செவனகல, நலசிறிகம பிரதேசத்தில் இறைச்சிக்காக மிருகங்களை வேட்டையாடும் நபர்களைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்ட வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் மீது ஒருகுழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று உடவலவ வனவிலங்கு அலுவலகம் தெரிவித்துள்ளது. உடவலவ தேசியப் பூங்காவின் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் இரு உத்தியோகத்தர்களே தாக்குதலில் காயமடைந்துள்ளனர். தாக்குதல் நடத்திய குழுவினர் வனவிலங்கு அதிகாரிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளனர் என்றும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது மிருகங்களின் தலை, 2 துப்பாக்கிகள், இரண்டு ரைபிள் தோட்டாக்கள், குளிர்சாதனப் பெட்டி, சைக்கிள், யானைத் தோல், இறைச்சி வெட்ட பயன்படுத்தியதாகக் கூறப்படும் மூன்று கத்திகள் என்பன கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ-இ)


## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 01 . 1957



இறப்பு 30 . 06 . 2023

### செல்லத்துரை செல்வம்

இணுவில் கிழக்கு. மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வம் கடந்த (30.06.2023) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா - சின்னத் தங்கச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், அம்பிகாபதியின் ஆருயிர்க் கணவரும், உமையாபதி, பிரதீஸ் (கனடா), தர்மாபதி (கனடா), சர்மிளாபதி (சுவிஸ்), கருணாகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சிவசொரூபன் (பெல்ஜியம்), அபிராமி (கனடா), சந்திரகாசன் (கனடா), குகானந்தன் (முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் - நல்லூர்), சஜானா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற பரஞ்சோதிதேவி மற்றும் இராசமணி (சுவிஸ்), வசந்தி (கனடா), கண்ணன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தசுவாமி , குஞ்சிதபாதம் செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அபிவின்ஜா, ராகவின்ஜா, விஸ்ணுசெல்வம், உமையாள் செல்வம், ருத்ரா செல்வம், ஆறன்செல்வம், சாகித்தியா, சகானா, சக்திதரன், ஸ்வரலயன், ஸ்வராங்கி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2023) திங்கட் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

077 978 9594, 021 224 1734 (cr 40215) (N-1)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 85 ரூபாய்

077 334 1281

## மரண அறிவித்தல்

### திரு. குமாரு குணரட்ணம்

பிறப்பு 03.02.1950

மறைவு 30.06.2023



நல்லூர், கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கு.குணரட்ணம் கடந்த (30.06.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி குமாரு சின்னப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற பராசக்தி, புவனேஸ்வரி, சீவரெட்ணம் மற்றும் இராஜேஸ்வரி, சிவராசா, இராசரெட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கெங்காதேவியின் அன்புக் கணவரும், அரவிந்தன், பார்த்தீபன், பிரதீபன், பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும், நிரோசா, கஜேந்தினி ஆகியோரின் மாமனாரும், லியனா, ஆதித்தியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.07.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் (4ஆம் ஒழுங்கை, அரசடி வீதி,) நடைபெற்று, கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

149/3, 4 ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, கந்தர்மடம், நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25422)A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 20.01.1947

மறைவு 01.07.2023

### சுவாமிநாதன் தம்பிராசா (ராசா)

நுணாவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் தம்பிராசா அவர்கள் கடந்த (01.07.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதன் சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், குணமணியின் அன்புக் கணவரும், சின்னத்தம்பி கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கேதீசன், ஜெகதீசன், கௌதீசன், சதீசன், மதீசன், மயூரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்சினி, சொர்ணமுகி, சுபாசினி, வனோஜா, சுமேதா, சந்திரகுமார் (அதிபர், யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்) ஆகி யோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், கார்த்திகேசு மற்றும் செல்லத்துரை, செல்வரட்ணம், கனகரட்ணம், மகேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2023) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் இடம் பெற்று, பூதவுடல் தகனத்திற்காக கொல்லங்கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 066 0741

(CS 25423)A-1

## நெஞ்சம் நெகிழும் 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

(03.07.2023)

அன்னை மடியில் 28 . 06 . 1940



இறைவன் அடியில் 03 . 07 . 2013

### அமரர் உயர்திரு. சின்னையா தவரெட்ணம் (J.P)

(முன்னாள் தலைவர், யாழ். மாவட்டக்கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம், யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை பணிப்பாளர் சபை உறுப்பினர், வடமாகாண கடற்றொழில் அமைப்புத் தலைவர்)

ஈர் ஐந்து ஆண்டுகள் நகர்ந்தாலும் நம்மை விட்டு
அகலாது உங்களின் நினைவுகள். நினைவுகள் வருகையில்
நிலை குலைந்து போகின்றோம் அப்பா!
உங்களை நினைக்காத நொடிகளில்லை
கண் இமைக்கும் நேரத்தில் கண்களை மூடிவிட்டீர் - உம் உருவம்
காண கண்ணீர் நித்தமும் வடிக்கின்றோம்
ஆண்டுகள் பத்து சென்றாலும் ஆறுமா எம் நெஞ்சம்
நிழல் தந்த ஆலமரம் நீங்கள் சாய்ந்ததினால் வேர் அறுத்த விழுதுகள் நாம்
நிழல்தேடி வருந்துகின்றோம் அப்பா!
உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களிலிருந்து என்றும் அழியாது
என்றும் நினைவுகள் அனுதினமும் இறைவனை வேண்டுகின்றோம்

தவரெட்ணம் [illegible]
93/1, [illegible]
குருநகர் யாழ்ப்பாணம்.

(cs 51090) (N-1)

உங்கள் பாசத்தினால் வாடும்
குடும்பத்தினர்
077 828 0029


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி வேட்பாளர் பஸில்; பெரமுனவுக்குள் பேச்சுகள்!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்சவை முன்னிறுத்த வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவின் தலைவரிடம் கடுமையாக கோரிக்கை விடுத்துள்ள னர் என்று பொதுஜன பெரமுனவின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் ஜனாதிபதித் தேர்தலில் பஸில் ராஜபக்ச போட்டியிட்டால், அவர் தனது அமெரிக்கக் குடியுரிமையை விலகிக் கொள்ளவேண்டும் என்பதால் பஸில் ராஜ பக்ச அந்த விடயத்தை தற்போது பரிசீலித்து வருகின்றார் என்று அறியமுடிகின்றது.

பஸில் ராஜபக்ச தனது அமெரிக்க குடியுரிமையை துறந்து தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றம் வந்து அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக போட்டியிடும் வாய்ப்பு உள்ளது என்று பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் சிங்கள ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார் .

முன்னர் பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியலில் இருந்து பஸில் ராஜபக்ச நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட தனது தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதால் பஸில் ராஜபக்சவுக்கு அந்த ஆசனம் வழங்கப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ச மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட மற்றும் பலம்வாய்ந்த உறுப்பினர்கள் கடந்த வாரம் பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் பல சுற்று விசேட கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர் என்றும், இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர் என்றும் அறிய முடிகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவரை நியமிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால், இந்த விடயம் தொடர்பில் பஸில் ராஜபக்ச மேலதிக தகவல்கள் எதனையும் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பேராசிரியர் ஒருவர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு தமது கட்சி தற்போது இரு வேட்பாளர்களை பரிசீலித்து வருகின்றது என்றும், அவர்களில் ஒருவர் பொருளாதாரம் தொடர்பில் நன்கு அறிந்தவர் எனவும் மற்றையவர் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பொறுப்பேற்கக் கூடியவர் எனவும் தெரிவித்துள்ளார்.

பேராசிரியரின் கருத்துப்படி, பொருளாதாரம் பற்றி நன்கு அறிந்தவர் என்ற வகையில், முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்சவே இருக்கலாம் என, கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இந்த விடயம் தொடர்பில் கட்சியில் மேலும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என்றும், அதற்கமைய இறுதி முடிவு எட்டப்படும் எனவும் அறியமுடிகின்றது. (எ-இ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




29.06.2023 அன்று இடம்பெற்ற மக்கள் நலன்பேணும் அமைப்பின் கோண்டாவில் கட்டடத் திறப்பு விழாவில் பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

**தேசகீர்த்தி கலாநிதி இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் சமூக சேவையினைப் பாராட்டி மக்கள் நலன் பேணும் அமைப்பினால்

**"கொடை வாரிதி" எனும் கௌரவ பட்டம்**

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி

மாண்புமிகு **மைத்திரிபால சிறிசேன**

அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டமையை பாராட்டுவதோடு அவர்களின் சமூக சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றோம்.

Best Wishes

உரிமையாளரும், ஊழியர்களும் -

**ஐங்கரன் களஞ்சியம் - 109, பலாலி வீதி, திருநெல்வேலி.**

(cs25395) (N-1)

## கண்ணீர் அஞ்சலி



**திரு. கந்தசாமி இளங்கோவன்**

**(ஓய்வுபெற்ற பிறப்பு, இறப்பு விவாக பதிவாளர்)**

அண்ணா உங்கள் அன்பிற்கு இன்று - அந்த ஆகாசமே தலைவணங்குகின்றது
நீங்கள் செய்த தியாகங்களுக்கு - முன்பு தாயின் அன்பும் தோற்றுத்தான் நிற்கின்றது - இங்கே
உங்களைப் போல பூமியும் இல்லை - இங்கு உங்களைவிட சாமியும் இல்லை - நாங்கள்
வார்த்தைகளால் மௌனமாகவும் சந்தோஷங்கள் மரணித்தும் நிற்கின்றோம். - நீங்கள்
இல்லா இடத்தில் ஏழு ஜென்மங்கள் போதாது நாங்கள் - உங்களிடம்
பட்டகடனை அடைக்க - எங்கள் கண்ணீர்த் துளிகள் எல்லாம் பாடுகின்றது
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.

**இலங்கைநாதன் குடும்பம்.**

(CS 25427)A-1

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 21 • 04 • 1947



இறப்பு 03 • 07 • 2012

**திருமதி பரஞ்சோதி வள்ளிப்பிள்ளை**

திதி: பூரணை (03.07.2023)

கருவிலே எம்மைச் சுமந்து பெற்றெடுத்து
கருத்துடனே எமை வளர்த்தெடுத்த அம்மாவே!
கலங்கி நிற்கின்றோம் உங்கள் பிரிவாலே
கடவுளின் பாதத்தில் உங்கள் ஆத்மா சாந்திபெற
கண்ணீருடன் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இக்கிரானை
கந்தரோடை, சுன்னாகம். (cs 51040 (N-1) குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தன் ஆலய
முன்னை நாள் தலைவரும்,
ஆலயத்தின் வளர்ச்சிக்கு தன்னை
அர்ப்பணித்து பணியாற்றியவருமான

அமரர்

**சின்னையா தில்லையம்பலம்**

அவர்களுக்கு
கண்ணீர் அஞ்சலிகள்

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திப்பதோடு அவரின் ஆன்மா
கரமத்தை கந்தனின் பாதாரவிந்தங்களை
சென்றடைய வேண்டுகின்றோம்.

**ஆலய நிர்வாக சபை,
நெடுந்தீவு மேற்கு
கரமத்தை கந்தன் ஆலயம்.**

(CS 25429)A-1

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

**கந்தசாமி இளங்கோவன்**

**(தலைவர்-சிற்பனை முருகன் ஆலய பரிபாலன சபை)**

சிற்பனை முருகன் ஆலய பரிபாலன
சபையின் தலைவராக கடமையாற்றிய
**கந்தசாமி இளங்கோவன்** அவர்கள்
காலமானதையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
சிற்பனை முருகனை
வேண்டுகின்றோம்.

[illegible] 21.02.1948 ஆண்டவன் அடியில் 02.07.2023

**சிற்பனை முருகன்
ஆலய பரிபாலன சபை,**

(CS 25430)A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சீனாவுடன் மீண்டும் பேச்சுகள் ஆரம்பம்

**கொழும்பு, ஜூலை 3**

**சேதன உரத்தை கொள்வனவு செய்வதற்காக செலுத்திய 6.2 மில்லியன் அமெரிக்க டொலரை மீளப்பெறுவதற்கு சீன அரசாங்கத்துடன் இலங்கை வெளிவிவகார அமைச்சு மீண்டும் பேச்சுகளை ஆரம்பித்துள்ளது.**

இந்த விடயத்தில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் தொடர்பாகவும், செலுத்திய தொகையை மீட்பது தொடர்பிலும் சீன அரசாங்கத்துடனும் சீன உர நிறுவனத்துடனும் பேச்சு நடத்தப்படுகின்றது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினை தொடர்பான கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், சேதன உரம் கொள்வனவு தொடர்பான கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது என்றும் அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாதிரிப் பரிசோதனை தோல்வியடைந்ததை அடுத்து, சீனாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய சேதன உரம் திருப்பியனுப்பப்பட்டது..

எனினும், அமைச்சரவை அங்கீகாரத்துடன் அந்த நிறுவனத்துக்கு 6.2 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை செலுத்தியது.

அந்தத் தொகையை ஏதேனும் ஒரு முறையின் கீழ் இலங்கைக்குக் கொண்டுவருவது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறுகின்றது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். (எ-இ)

கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவாக -

# வாக்களித்த அனைவருக்கும் 25 இலட்சம் பேரின் சாபம் சேரும்

## சாணக்கியன் எம்.பி. எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 3

தேசிய கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவாக வாக்களித்த அனைவருக்கும் 25 இலட்சம் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய உறுப்பினர்களின் சாபம் சென்றடைய வேண்டும். தேசிய கடன் மறுசீரமைப்பு என்பது அரசாங்கத்தின் பிறிதொரு மோசடியாகும் .

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகித்த நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி மோசடி முதலாவது மோசடி. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசாங்கத்தில் நாடு வங்குரோத்து நிலையை அடையும் என அறிந்தும் வெளிநாட்டுக் கடன் டொலரில் செலுத்தப்பட்டது.

தற்போது கடன் மறுசீரமைப்பு ஊடாக மற்றுமொரு மோசடி இடம்பெறவுள்ளது-என்றார். (எ-இ)

# நடிக்க வாய்ப்புத் தருவதாக இளம் பெண்களிடம் மோசடி

## வலைவீசுகின்றது பொலிஸ்

கொழும்பு, ஜூலை 3

நடிப்பதற்கு வாய்ப்புத் தரப்படும் என்று தெரிவித்து இளம் பெண்களிடம் பண மோசடியில் ஈடுபட்டுவரும் குழுவைத் தேடி தலங்கம பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்த மோசடி குழுவினர் டிக்டொக் ஊடாக இளம் பெண்களின் கையடக்க தொலைபேசி இலக்கங்களைப் பெற்று அவர்களுக்கு குறுஞ்செய்திகளை அனுப்பியுள்ளனர் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்துள்ள வங்கிக் கணக்கு இலக்கங்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசி இலக்கங்கள் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)




சரியான பாதை இதோ



SINGER FINANCE
குத்தகை
வட்டி குறைக்கப்பட்டுள்ளது - தடை அகற்றப்பட்டுள்ளது
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

- இரு பிணைதாரர்களுக்கு பதிலாக ஒரு பிணைதாரர் போதுமானது
- இரு தரப்பும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டவுடன் உடனடியாக முதற்கட்ட கொடுப்பனவு
- உரிய ஆவணங்கள் பூர்த்தி எனில் 48 மணி நேரத்தினுள் குத்தகை அனுமதி

QUICK DRAFT
எமது QUICK DRAFT சேவையின் மூலமாக எந்தவொரு வாகனத்தினதும் பதிவுப் புத்தகத்தை பிணையாக வைத்து, பணத்தைப் பெற்றுக்கொள்ளும் வசதி மற்றும் மாறுபடும் வட்டியுடன் தவணைக் கட்டுப்பணத்தை செலுத்தும் வாய்ப்பு

011 2 400 400 077 7 725 000 Hayleys

SINGER FINANCE

# சிவபூமி சிறுவர் பாடசாலையின் ஆண்டு விழா

கோண்டாவில் சிவபூமி சிறுவர் மன விருத்திப் பாடசாலையின் 20ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா தம்பதியர், சிறப்பு விருந்தினர்களாக அவுஸ்திரேலியா மருத்துவக் கலா நிதி வை.மனோமோகன் தம்பதியர், கௌரவ விருந்தினராக நல்லூர் பிரதேசசெயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-ரி-159,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கனடா மிட் லன் மீடியா நிறுவன ஊழியர்களின் நிதிப்பங்களிப்பில் அச்சுவேலி ஆயுள்வேத மருத்துவமனைப் பகுதியில் வாழும் 54 முதியவர்களுக்கு உணவுப் பொதிகள் செல்வபுரம் செல்வா சன சமூக நிலையத்தில் வைத்து யாழ்.மாநகரசபை முன்னாள் உறுப்பினரும் சமூக திலகம் லயன் கலாநிதி நா.தனேந்திரனால் அண்மையில் வழங்கப்பட்டது. (ய)



பொலிஸார், பொதுமக்கள் மற்றும் ஊடகங்களுக்கு இடையிலான கருத்துமுரண்பாடுகளைத் தவிர்த்து, ஆரோக்கியமான கருத்தாடல்களை ஏற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலொன்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவே தலைமையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வடமாகாண பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர். (ம-26)



மிருசுவில் தவசிகுளம் கண்ணகை அம்பாள் கோவில் பெருந் திருவிழாவின் வேட்டைத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது. அம்பாள் குதிரை வண்டி மூலம் கிராமத்தில் அருள்பாலித்தாள். (ம-9)



வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களில் ஒன்றான யாழ். மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் நிர்வாகப் பொறுப்புக்கள், புதிய தர்மகத்தாசபைத் தலைவரான தம்பிராசா தர்பாகரன் தரப்பினரிடம் முன்னைய நிர்வாகத்தினரால் கடந்த வெள்ளிக்கிழமை ஒப்படைக்கப்பட்டன. யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன், சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் யசோதரா உதயகுமார் ஆகியோரின் இணைந்த தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. (ம-27,125)

## புனரமைக்கப்பட்ட தலங்கைமங்கை குளம் கையளிப்பு





சங்கானை தெற்கு கமக்கார அமைப்பின் ஆதரவுடன் உலக சித்தன்கேணி ஒன்றிய மக்களின் நிதி அனுசரணையுடன் ப்ரத்யங்கிரா அறக்கட்டளையால் வட்டுக்கோட்டை சித்தன்கேணி துறட்டிப்பனை அம்பாள் ஆலயத்துக்கு அருகே புனரமைக்கப்பட்ட தலங்கைமங்கைகுளம் மக்கள் பாவனைக்காக கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி தெய்வநாயகி பிரணவனால் மேற்குறித்த குளம் திறந்துவைக்கப்பட்டது. (ய-125)



சுழிபுரம் மேற்கு கலைமகள் அறநெறிப் பாடசாலையால், சைவசமயநெறிகளை மையப்படுத்தி மாணவர்களிடையே அறநெறிப் போட்டிகள் அண்மையில் நடத்தப்பட்டன. (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர் நடந்த...

கொக்குத்தொடுவாய் மத்தியில் பச்சை சீருடைகள், பெண்களின் உள்ளாடைகள் என்பனவற்றுடன் பல்வேறு மனித எச்சங்களும் கடந்த 29ஆம் திகதி மீட்கப்பட்டிருந்தன. இது தொடர்பான மேலதிக அகழ்வுகள் எதிர்வரும் 6ஆம் திகதி நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தப் புதைகுழி அகழ்வு சர்வதேச மேற்பார்வையில் - பங்கேற்புடன் முன்னெடுக்கவேண்டும் என்று தமிழ்த் தரப்பால் வலியுறுத்தப்படுகின்றது. இது தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

**ஜனாதிபதி ரணில்**

'இந்த விடயத்தை ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன். நீதிமன்றத்தின் முன் பாரப்படுத்தப்பட்டுள்ளது இவ் விவகாரம். நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய அடுத்தகட்ட பணிகள் இடம்பெறும். இதைவிட மேலதிகமாக எந்தக் கருத்தையும் தெரிவிக்கவிரும்பவில்லை' - என்றார்.

**நீதி அமைச்சர் விஜயதாஸ**

'போர் இடம்பெற்ற பகுதிகளில் புதைகுழிகள் இருக்கத்தான் செய்யும். அவற்றைத் தோண்டும்போது சடலங்களும் ஆயுதங்களும் மீட்கப்படும். முல்லைத்தீவு புதைகுழியிலிருந்து போரில் ஈடுபட்ட ஒருதரப்பின் சீருடைகள் மீட்கப்பட்டதாக அறிந்தேன். நீதிமன்றம் அந்தப் புதைகுழியை அகழ்வதற்கான உத்தரவையும் விடுத்துள்ளது. அடுத்த கட்டச் செயற்பாடுகள் தொடர்பில் இப்போது எல்லாம் பதிலளிக்கமுடியாது. அதே வேளை அந்தப் புதைகுழி விவகாரம் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுபவர்களுக்கும் என்னால் பதில் கூற முடியாது' - என்றார். (அ-ஓ,5,22)

## பிரபா...

தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு 3 நாள் பயணமாக வருகை தந்திருந்த மைத்திரிபால சிறிசேன, நல்லூரில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரபணுப் பரிசோதனைக்காக இராணுவத்தால் மாதிரி எடுக்கப்பட்டு, மீட்கப்பட்ட உடல் அவருடையதே என உறுதி செய்யப்பட்டதாகஇராணுவம் கூறியிருந்தது. அது தொடர்பான தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெறுவதற்கு முயற்சித்த போதிலும் அதனை இராணுவத்தினர் தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி மறுத்திருந்தனர். இறுதிப்போர் இடம்பெற்ற காலப்பகுதியில் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் என்ற அடிப்படையில் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதில் அளித்த மைத்திரிபால சிறிசேன, இறுதி இரண்டு வாரங்களே பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தேன். மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக அன்று அறிந்திருக்கவில்லை. இன்றும் அது தொடர்பாக எந்தவொன்றும் எனக்குத் தெரியாது என்று பதிலளித்தார்.

இதன்போது 'இறுதிக் கட்டப்போரை நடத்தியது நீங்கள் (மைத்திரி) என்றும் போர் வெற்றியில் உங்களுக்கு பங்கு உள்ளதாகவும் தெரிவித்திருந்தீர்களே?' என்று ஊடகவியலாளர்கள் மீளவும் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதில் அளித்த மைத்திரிபால சிறிசேன 'அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச, வெளிநாட்டில் இருந்த போதிலும் பாதுகாப்பு சார்ந்த உத்தரவுகளை அவரே வழங்கியிருந்தார்' எனவும் சுட்டிக்காட்டினார்.

'இறுதிப் போரில் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா?' என மீண்டும் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். வேலுப்பிள்ளை பிரபாகரனின் உயிரிழப்பு தொடர்பாக எந்தவொரு விடயமும் தமக்கு அறிக்கையிடப்படவில்லை என மைத்திரிபால சிறிசேன மீண்டும் குறிப்பிட்டார். (அ-ஓ,26,27,125)

## ஒற்றையாட்சிக்குள்...

நேற்றுத் தெரிவித்தார்.

நல்லூரில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், இந்த நாட்டில் சமஷ்டித் தீர்வை முதலில் முன்வைத்தது பண்டாரநாயக்க. அவர் உங்கள் கட்சியின் நிறுவுநர். உங்களது கட்சி ஒற்றையாட்சியைத்தாண்டிய சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்குவதற்குத் தயாரா என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் நேரடியாகப் பதிலளிப்பதை தவிர்த்துக்கொண்டார்.

'தந்தை செல்வா - டட்லி, பண்டா ஒப்பந்தம் என்பவற்றை அப்பொழுது இருந்த தலைமைகள் முறையாக நிறைவேற்றியிருந்தால் 30 ஆண்டுகால போர் இடம்பெற்றிருக்காது. மாகாணசபையில் இருக்கின்ற குறைகள் நீக்கப்படவேண்டும். அதனை வலுப்படுத்தவேண்டும். நாம் அதனைச் செய்வோம். நான் எனது காலத்தில் அனைத்து மாகாண சபைகளுக்கும் தேவையான பணம் அனுப்பினேன். அதனை முழுமையாகச் செலவு செய்யாது சிறிதளவே செலவு செய்தன. எனக்கு அந்தப் பணத்தை மீண்டும் அனுப்பினார்கள். கிடைக்கின்ற பணத்தை தேவையில்லாது செலவு செய்வார்கள். மாகாணசபை அமைச்சர்கள், கதிரை, மேசை வீட்டு உபகரணங்கள் என்பவற்றை மக்களுக்கு வழங்குவார்கள். மீளவும் தாங்கள் தேர்தலை சந்திப்பதற்காகவே அவர்கள் அவ்வாறு செய்வார்கள். மாகாணசபைகள் பிரச்சினைகளைக் கலந்துரையாடி முடிவை எடுக்கவேண்டும். இயன்றவரை ஜனாதிபதியாக இருந்தபோது நான் அறிவுரைகளை வழங்கியுள்ளேன். மாவட்ட அபிவிருத்திச் சபைகளை நிலையானதான ஒன்றாக மாற்றினால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படாது' - என்றார். (அ-ஓ,125)

## பட்டப்பகலில்...

பட்ட பகுதியில் பலாலி வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முகங்களை கறுப்புக் கண்ணாடியிலான முகக்கவசங்களால் மூடி மறைத்தவாறு பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள், வயாவிளானிலிருந்து திருநெல்வேலி நோக்கித் துவிச்சக்கரவண்டியில் பயணித்துக்கொண்டிருந்த முதியவரிடம் 'இப்படியே புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்திக்குச் செல்லலாமா?' என வழி கேட்டுள்ளனர். அவர் பதிலளித்துக் கொண்டிருந்தபோதே குறித்த நபர்கள் வேறு சில விடயங்கள் தொடர்பிலும் வினாவியுள்ளனர். முதியவர் சந்தேகமடைந்து சுதாகரிப்பதற்கிடையில் அவரது மேல்சட்டையிலிருந்த ஒருதொகைப் பணத்தை மோட்டார் சைக்கிளின் பின்னாலிருந்த நபர் பறித்தெடுத்துள்ளார். பணத்தைப் பறிகொடுத்த முதியவர் 'கள்ளர், களவு எடுக்கிறாங்கள்' என்று உரத்துக் குரலெழுப்பிய போதிலும் அங்கிருந்து வேகமாக மோட்டார் சைக்கிளில் அவர்கள் சென்றுள்ளனர். அவர்களின் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடு மறைக்கப்பட்டிருந்ததாகவும் முதியவர் தெரிவித்தார். (அ-ஓ,66)

## விகாரைகளை...

யேற்றங்கள் இருந்தமை தெளிவாகின்றது என எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையில் தொல்லியல் சக்ரவர்த்தி என்று அழைக்கப்படும் எல்லாவல மேதானந்த தேரர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கந்தரோடையில் மட்டும் 50 தூபிகள் கண்டுபிடிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. வடக்கில் மீட்கப்பட்ட கல்வெட்டுக்களின் மூலம், கடந்த காலங்களில் அங்கு சிங்களக் குடியேற்றங்கள் இருந்ததாகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. பொலன்னறுவை ராஜதானியை ஆண்ட முதலாம் மகா பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தில் ஊர்காவற்றுறை துறைமுகத்தின் ஊடாக இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையில் வர்த்தகம் நடந்தமை கல்வெட்டுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. துறைமுக விதிகள் குறித்து தமிழில் கல்வெட்டு எழுதப்பட்டது. அந்தக் கல்வெட்டு தற்போது நாகபூஷணி அம்மன் கோயிலில் உள்ளது. கல்வெட்டின் இறுதியில் சமஸ்கிருதத்தில் 'மஹா பராக்கிரமபாகு சகல சிங்களச் சக்கரவர்த்தி' என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் இலங்கையில் தமிழர் தாயகம் இல்லை. அப்படி நிரூபிக்க யாரேனும் இருந்தால் நான் பதில் சொல்லத் தயார். மேலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பெரும்பாலான பழைய கோயில்கள் பண்டைய பௌத்த தலங்களில் கட்டப்பட்டுள்ளன. சில பண்டைய பௌத்த புனித ஸ்தலங்களிலிருந்து கலைப்பொருட்களை வேறு இடங்களுக்கு நகர்த்தி கோயில்கள் கட்டப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு குருந்தூர்மலை விகாரைக்கு ஆறு முறை சென்றிருக்கிறேன். 1964 இல் முதன்முதலில் சென்றேன். அந்தப் பகுதியில் ஒரே ஒரு தமிழன் வாழ்ந்தான். குருந்தூர்மலை இடிபாடுகளை நமக்குக் காட்டியவர் ஒரு சிறு குடிசையில் வாழ்ந்தவர். குருந்தூர்மலை தொல்லியல் தளத்துக்கு முதல்முறை சென்றபோது, ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் கல்வெட்டு அழிக்கப்பட்டது. குருந்தூர்மலை விகாரையின் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க மூன்றாம் மிஹிந்து மன்னர் வந்ததாக அந்த கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த கிராமத்தில் ஒரு சிறிய ஏரி உருவாக்கப்பட்டது. கல்வெட்டின் படி ஏரியின் பெயர் குருந்த வாபி. அந்த ஏரி தற்போது தண்ணிமுறிப்பு ஏரி என அழைக்கப்படுகிறது. பின்னர் தமிழ்க் கிராமங்கள் தோன்றியதன் மூலம் மக்கள் தண்ணிமுறிப்பு ஏரியில் தண்ணீர் எடுத்து விவசாயம் செய்துள்ளனர். ஆனால்,அவர்கள் பௌத்த புனித தளத்துக்கு உரிமை கோர வரவில்லை. இடிபாடுகள் சேதமடையவில்லை. சமீபகாலமாகத்தான் உரிமை கோரத் தொடங்கியுள்ளனர் - என்றார். (அ-ஒ,இ)

## போராடுவதற்கு...

ளார். இந்தத் தகவலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஊடகங்களிடம் நேற்று வெளிப்படுத்தினார்.

தையிட்டி விகாரைக்கு எதிரான 4ஆம் கட்டப்போராட்டம் நேற்று மாலை ஆரம்பமாகியது. இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தையிட்டி விகாரைக்கு எதிராக வீதியில் நாம் போராட பொலிஸார் தடைகளை ஏற்படுத்தினர். இதனையடுத்து விகாரைக்கு அருகிலுள்ள தனியார் காணிக்குள் நின்று நாம் கடந்த 3 தடவைகளும் போராட்டத்தை முன்னெடுத்தோம். இம்முறை அந்தக் காணிக்குள் நாம் செல்வதை தடுப்பதற்கு பலாலி பொலிஸார் 'கரவாக' முயற்சித்துள்ளனர்.

காணியின் உரிமையாளரை பலாலி பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுக் காலை அழைத்துள்ளனர். நீங்கள் எத்தனை தடவைகள் காணி வழங்கினீர்கள்? ஏன் காணி வழங்குகின்றீர்கள்? என்று கேள்வி எழுப்பிய பொலிஸார் அவரை உளவியல் ரீதியாக அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர். காணியை வழங்கினால் வழக்கு நடவடிக்கைகளில் தானும் தொடர்புபட வேண்டி வரும் என்ற அச்சத்தில் அவர் உள்ளார். இதனையடுத்து பொலிஸார் அந்தக் காணிக்குள் பிரவேசிக்க முடியாதவாறு தடைகளை ஏற்படுத்தியுள்ளனர். எங்கள் சொந்த நிலத்துக்குள் நாம் செல்ல முடியாது. ஆனால், இந்த நிலத்துடன் தொடர்பேயில்லாத சிங்கள மக்களை பாதுகாப்புடன் எங்கள் காணிக்குள் அடாத்தாக அமைக்கப்பட்ட விகாரைக்கு அழைத்து வருகின்றார்கள்.

எங்கள் மக்களுக்கு அன்னதானத்தையும் வழங்கி, விளையாட்டு உபகரணங்களையும் வழங்கி இராணுவம் தமக்கு வெள்ளையடிக்க முடியும் என்று நம்பினால் அது அவர்களின் முட்டாள்தனம் - என்றார். (அ-ஓ,125)

## தையிட்டி...

வரப்பட்டு வழிபாடுகள் இடம்பெறவுள்ள நிலையில் நான்காம் கட்டப் போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வழமையாகப் போராடும் காணிக்குள் நுழைய முடியாத நிலையில் விகாரைக்குச் செல்லும் வீதிக்கு போராட்டக்காரர்களால் தடை போடாதவகையில், பொலிஸாரால் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் அதிகளவான பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

'எமது நிலம் எமக்கு வேண்டும்: இன்றே விடுவியுங்கள்', 'தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து சிங்களமயமாக்கும் சதி முயற்சியை நிறுத்து', 'எங்கள் கிராமத்தில் விகாரை வேண்டாம்', 'தொல்பொருள் திணைக்களம் சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமா?', 'மரபுரிமை ரீதியான இன அழிப்பை நிறுத்து' என்ற பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இன்றும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் பொதுமக்களை பங்கேற்று ஆதரவு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-ஓ,27,125)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஒரே வாரத்தில்...

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பிரசவத்துக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்குச் சென்ற தாய்மார்களில் கடந்த வாரம் மாத்திரம் பிறப்பின்போது நான்கு தாய்மார்களின் சிசுக்கள் இறந்துள்ளன. அத்தோடு தாய் ஒருவரின் கருப்பையும் அகற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் எழுத்து மூலம் மாவட்ட மருத்துவமனையின் பணிப்பாளருக்கு முறையிட்டுள்ளதோடு, மருத்துவர்களின் அக்கறையின்மை மற்றும் உரிய நேரத்தில் சிகிச்சைகளை வழங்காதுவிட்டமையே இந்தச் சம்பவங்களுக்கான காரணம் என குற்றம் சுமத்தியுள்ளனர். மருத்துவக் காரணங்களால் தான் தங்களது குழந்தைகள் இறந்துள்ளதாகப் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர். மேலும் நான்கு குழந்தைகள் இறந்ததருணங்களிலும், பிரசவத்தாயாரது கருப்பை அகற்றப்பட்ட சந்தர்ப்பத்திலும் ஒரு குறித்த பயிற்சி மகப்பேற்றியல் மருத்துவ நிபுணரே சம்பந்தப்பட்டிருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு வினவியபோது, முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், இது குறித்த ஆரம்பப் புலன் விசாரணைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (அ-ஒ,214)

## பயணச்சீட்டின்றி பயணிப்போர் அதிகரிப்பு

இந்த ஆண்டின் கடந்த 6 மாதங்களில் பயணச்சீட்டின்றி ரயிலில் பயணிப்பவர்களின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ரயிலில் பயணச்சீட்டினின்றிப் பயணித்தமைக்காக 403 பேருக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து 12 இலட்சத்து 93 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பயணச்சீட்டின்றிப் பயணித்த 693 பயணிகளிடம் இருந்து அறவிடப்பட்ட தொகை 2 இலட்சத்து 89 ஆயிரத்து 992 ரூபாவாகும். (எ-இ)


### DHL துரித பொதிகள் சேவை



சகல நாடுகளுக்கும் கடிதங்கள், பொதிகள்

3-5 வேலைநாட்களில் ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம்நெற்

321, K.K.S. Road, Jaffna.

T.P: 0777 55 45 28

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில் 44 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

✓நவக்கிரி மாணிக்கப் பிள்ளையார் கோயில் வீதியில்.

✓18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

✓3 வருடம் பூர்த்தி அடைந்த தென்னைகளும் உள்ளன.

✓நிலாவரை வற்றாக் கிணற்றில் இருந்து 1 km தூரம்.

✓நன்னீரூற்றுச் சூழல்

✓1 பரப்பின் விலை 1200000/= (பன்னிரண்டு இலட்சம்)

**பார்வையிடும் நேரம் :-**

காலை 6.00 மணி தொடக்கம்

மாலை 6.00 மணிவரை.

தொடர்புகளுக்கு :- ஜெயம்

077 81 47 389

077 98 65 457

### மணமகள் தேவை

உத்தர நட்சத்திரம் 51 பாவக்கிரகம் 6ம் இடத்தில் சூரியன் செவ்வாய் உள்ள பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு:-077 3276 432

### வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு அரைக்கும் தொழில் தெரிந்த ஆள்கள் உடன் தேவை. நேரில் வரவும்.

ஆரணி மில்ஸ்

246, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

077 352 8986

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி மருத்துவபீட பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

077 209 8826

### காணி அல்லது கடை தேவை

யாழ்ப்பாணம் நகரப்பகுதிக்குள் (Town area)

கடை அல்லது காணி உடன் தேவை.

076 681 7452, 077 844 7319

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.
* ஒரு பரப்பின் விலை 150,000/= (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்) மட்டும்.

தொடர்பு:076 8260 354, 076 0570 354


## மரண அறிவித்தல்



### கந்தசாமி இளங்கோவன்

(ஓய்வுபெற்ற தீவுப்பகுதி பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர், முன்னாள் யாழ். மத்தியஸ்தர் சபை மத்தியஸ்தர், தலைவர் சிற்பனை முருகன் ஆலய பரிபாலன சபை)

வேலணை மேற்கு, சிற்பனையடியைப் பிறப்பிடமாகவும் இல:131/1, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் தற்போது இல: 639/1, நாவலர் வீதி, நல்லூரை வசிப்பிடமாவும் கொண்ட கந்தசாமி இளங்கோவன் அவர்கள் நேற்று (02.07.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி விசாலாட்சி அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற நமசிவாயம் பொன்னம்மா அவர்களின் அன்பு மருமகனும், சறோஜினி தேவியின் (ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதியும் சிரேஷ்ட சட்டத்தரணியும்) பாசமிகு கணவரும், அன்னலட்சுமியின் சகோதரனும், இலங்கைநாதன் (முன்னாள் அன்னராஜா ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்), குருசாமி (ஓய்வுபெற்ற தொழில் நீதிமன்றத் தலைவர்), திலகவதி, யோகபதி, பூபாலபிள்ளை, Dr.சிவபாலன் ஆகியோரின் மைத்துனரும், ஜனனி, கௌதமன் (சட்டக்கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விசாகன் (HNB அச்சுவேலிக் கிளை), அகிலா (MLT - Northern Central Hospital) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.07.2023) திங்கட்கிழமை பி.ப 02.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கௌதமன் (மகன்) - 076 928 3034**
**விசாகன் (மருமகன்)- 077 932 7235**
**இல:639/1, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.


### சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி

கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனை பொருட்கள், விளையாட்டு பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடல் பட்டின்கள், குடைகள், அழகுசாதன பொருட்கள், மாஸ்க் வகைகள், கவரிங் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள் இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்று கொள்ளலாம்.

உரிமையாளர்:
தே. கலைத்தாசன் (கரன்)
021 3155 900

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (கஸ்தூரியார் வீதி)யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.